Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 06, 2023

திங்கட்கிழமை மார்ச் 06, 2023 | ஒளி: 08 கதிர்: 222 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

தீயவர்களோடு நேசம் செய்யாதே. அற்பர்களோடு
இணங்காதே. நேர்மையான நல்லோருடன் நட்புக் கொள். மேன்மக்களோடு சேர்ந்து பழகு.
(நற்மதிபோதனை)

பஞ்ச இரத பவனி இன்று

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமக பஞ்ச இரத பவனி இன்று (06) காலை இடம்பெறும். (3ஆம் பக்கத்தில் கட்டுரை)

வாயை மூடிக்கொண்டு உட்காரு

ஜனாதிபதிக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்கிறார் சஜித்

இந்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்திய ஜனாதிபதிக்கு நீதிமன்றம் "Shut up and sit down" (வாயை மூடிக்கொண்டு உட்காரு) என்ற வகையிலான தீர்ப்பை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கும் ஒத்திவைக்கவும் கூட்டு உபாயங்களை முன்னெடுத்த ஜனாதிபதிக்கு, உயர்நீதிமன்றம் தக்க பதிலை வழங்கியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தேர்தலை ஒத்திவைக்க இந்த அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் இனிமேலும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கலுந்துறை, புளத்சிங்கள பிரதேசத்தில் சனிக்கிழமை (04) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

'அனா'வுக்கு கைவிலங்கு; திருடியவர்களுக்கு பிணை

முன்னாள் கிரிக்கெட் தலைவர் அனா புஞ்சிஹேவாவின் அலைபேசி உள்ளிட்ட பெறுமதிவாய்ந்த பொருட்களை திருடிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கடை இலக்கம் 02 நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

"இழுக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்"

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பு இலங்கைக்கு தற்போது அவசியமானதாக இருந்தாலும், உண்மையில் அது தேசத்தின் வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

யாழ். மேயர் வேட்பாளராக சொலமன் சிறில் பரிந்துரை

நான்கு நாள்களில் மேயர் தெரிவு

யாழ். மாநகர சபையின் மேயர் வேட்பாளராக இலங்கை தமிழரசு கட்சியின் சொலமன் சிறிலை நியமிக்க திட்டமிட்டு இருப்பதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

வியாழனுக்கு முன் தேர்தலுக்கான திகதி

மூலரையும் மீண்டும் அழைக்கிறது தேர்தல் ஆணைக்குழு

2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கி வைப்பதை தவிர்க்குமாறு நிதி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (03) இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

20க்கு முன்னர் தேர்தலை நடத்தவேண்டும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கணவனை பழிவாங்குவதற்காக சிறுமியை இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டு நாடகமாடிய தாய்

■ ஸ்ரீநாத் பிரசன்ன ஜயசூரிய, ஹிரான் பிரியங்கர ஜெயசிங்க

கணவனை பழிவாங்கும் நோக்கில், ஒன்றரை வயது சிறுமியை இறால் தொட்டியில் தள்ளிய சம்பவம் உடப்பு, கட்டகடுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

ரூபாய் வலுவடைவதால் விலைகள் குறைகின்றன

ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைவதன் காரணமாக, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 5 முதல் 6 சதவீதம் வரை குறைவடையும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஒற்றை இலக்க பணவீக்கத்தை நோக்கி உறுதியாக நகர்கிறது

இலங்கை மத்திய வங்கியால் முன்னெடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாணய நிதியம் தனது பாராட்டை தெரிவித்துள்ளது.

கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கி எடுத்ததீர்மானம் பொருத்தமான நடவடிக்கை எனவும், பணவீக்க இலக்குகளின் கீழ் அமைக்கப்பட்ட தமது நோக்கங்களுக்கு ஏற்ற வகையில், இது அமைந்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டத்தின் சிரேஷ்ட பிரதானி Peter Breuer, இலங்கைக்கான செயற்றிட்டத்தின் பிரதானி Masahiro Nozaki ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

மீனவர்கள் எல்லை மீறினால் பாரிய போராட்டம் வெடிக்கும்

டக்ளஸுக்கு அழைப்பில்லை; தமிழ் எம்.பிக்கள் சிலர் வரவில்லை

■ நிதர்சனன் லிங்காத்

இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பதற்கு எதிராக, பாரிய போராட்டம் நடத்தவுள்ளதாக வடக்கு மாகாண மீனவ சங்க பிரதிநிதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

இம்மாதம் முழுவதும் பழைய விலைக்கு கேஸ்

லிட்ரோ எரிவாயுவின் விலையில் எவ்வித மாற்றமும் இம்மாதம் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், இலங்கையில் எரிவாயுவின் விலையை இன்றையதினம் (மார்ச் 5ஆம் திகதி) உயர்த்தப் போவதில்லை என்று லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

நடுவீதியில் புரண்டது பௌசர்: ஒருவர் பலி; இருவருக்கு காயம்

■ எஸ். ஆரூரன்

கொழும்பு-கண்டி வீதியில் வரக்காபொல நகரில், பௌசர் ஒன்று நடுவீதியிலேயே புரண்டு விபத்துக்கு உள்ளானதில், ஒருவர் மரணமடைந்துள்ளார். சம்பவத்தில் மேலுமிருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம், நேற்று (05) அதிகாலை 4.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சீபெந்து கலவை பௌசரே இவ்வாறு நடுவீதியில் புரண்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

தொடர்ச்சி P2

நால்வர் அடங்கிய குழு அமெரிக்கா பறக்கிறது

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை 2023 ஆம் ஆண்டு மார்ச் இறுதி அல்லது அதற்கு முன்னர் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற நிலையில், நால்வர் அடங்கிய உயர்மட்ட குழுவொன்று அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

திறைசேரியின் செயலாளர் கே. மஹிந்த சிறிவர்தன தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவே அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

தொடர்ச்சி P2

மற்றுமொரு பின்னடைவை சந்தித்தது இலங்கை

Brand finance தரவரிசைச் கூட்டெண்ணின் சமீபத்திய தரவரிசையின்படி, உலகில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை 115 ஆவது இடத்திற்குச் சென்றுள்ளது. அந்த தரவரிசையின்படி, கடந்த ஆண்டு இலங்கை 73ஆவது இடத்தில் இருந்தது.

அறிக்கையின்படி, கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை அனுபவித்த ஜாம்பியா, மியான்மார் போன்ற நாடுகள் முறையே 113, 114 ஆவது இடத்திலும், ஈராக் 116 ஆவது இடத்திலும், லாவோஸ் 117 ஆவது இடத்திலும், உகண்டா 118 ஆவது இடத்திலும் உள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

வாயை மூடிக்கொண்டு உட்காரு

அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட சிலர் மௌனம் காத்த வந்த வேளையில், ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டின் இரண்டு கோடிக்கும் அதிகமான மக்களின் சார்பாக நீதிமன்றம் சென்றதாகவும், இத்தீர்ப்பின் காரணமாக இந்நாட்டு மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்த ஒரே அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனை நடத்தி முடிக்க முடியுமான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும், எதிர்காலத்திலும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தொடர்ந்தும் முன் நிற்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

வங்குரோத்தான நாட்டில் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த வீழ்ச்சியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய இயலுமை கொண்ட குழு, ஐக்கிய மக்கள் சக்தியிடமே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பெப்ரவரி 23ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சியினர் கடுமையான கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்த போது சற்றுக் கோபமடைந்தார். அதன்பின்னர், Shut up and sit down எனப் பல தடவைகள் உரத்துக் கூறி, எதிர்க்கட்சியினரை வாயடைக்க செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அனா'வுக்கு கைவிலங்கு; திருடியவர்களுக்கு பிணை

புஞ்சிஹேவாவின் கைகளில் கைவிலங்கு இட்டு, இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் களஞ்சியப் பிரிவில் பணிபுரிந்த 21 வயதான தொழிலாளர்கள் ஆவர். அவர்கள் இருவரும் கொழும்பு-15 ஐ சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

"இழுக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்"

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தற்போதைய சவாலானது வளர்ச்சியை உருவாக்குவதாகும். இந்நிலையில் தேவைகள் மோசமடைந்து வரும் நிலையில், இழக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

எனவே, தேவையான வளர்ச்சியை உருவாக்க, உள்நாட்டில் இயங்கும் வர்த்தகம் அல்லாத வளர்ச்சி இனி போதுமானதாக இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மேயர் வேட்பாளராக சொலமன் சிறில் பரிந்துரை

தமிழரசு கட்சியின் மாநகர சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல், நேற்று (05) இடம்பெற்றது. யாழ். மாநர்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களில் பெரும்பாலானோர் சொலமன் சிறிலின் பெயரை முன்மொழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை மேயர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், சொலமன் சிறிலுக்கான ஆதரவை திரட்டிய பின்னர் அவரை மேயர் வேட்பாளராக களமிறக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

யாழ். மாநகர சபையின் மேயராக இருந்த இ.ஆர்னோல்ட்டின் வரவு- செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட அவர் பதவி விலகியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் சொலமன் சிறிலை, மேயர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று மாநகர சபை உறுப்பினர்களும், கட்சி உயர் மட்டத்தில் ஒரு சிலரும் விரும்புகின்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நுபாய் வலுவடைவதால் விலைகள் குறைகின்றன

இறக்குமதி செய்யப்படும் சில உணவுப் பொருட்களின் விலைகள் ஏற்கெனவே குறைந்துள்ளதாக குறித்த சங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் சீனியின் மொத்த விற்பனை விலை 17 ரூபாயால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைவதன் காரணமாக எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் மேலும் குறையும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வியாழனுக்கு முன் தேர்தலுக்கான திகதி

இந்நிலையில், நிதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் மாஅதிபர் மற்றும் அரச அச்சகர் உள்ளிட்ட அதிகாரிகளை மீண்டும் ஆணைக்குழுவுக்கு அழைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மீண்டும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (07) கூடி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து கலந்துரையாட உள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (03) வழங்கிய தீர்ப்புக்கு அமைய, நிதி அமைச்சு உள்ளிட்ட குறித்த நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதி குறித்து எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் அறிவிப்பதாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளித்தே, உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை வெள்ளிக்கிழமை (03) பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

20க்கு முன்னர் தேர்தலை..

தேர்தலுக்கான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என திறைசேரி மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழு முறைப்பாடு செய்திருந்தது.

இந்நிலையில், உயர்நீதிமன்ற உத்தரவு தற்போது கிடைத்திருப்பதால், மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் திகதி குறிக்கப்பட வேண்டும் என சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் படி, மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆகவே, சட்டத்துக்கு இணங்க தேர்தலை நடத்துவதாக இருந்தால், மார்ச் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றார்.

சிறுமியை இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டு நாடகமாடிய தாய்

உடப்பு, கட்டைகடுவ பிரதேசத்தில் உள்ள இறால் பண்ணையில் பணிபுரியும் தொழிலாளி ஒருவரின் மனைவி, தனது பெண் குழந்தையை, இறால் தொட்டிக்குள் கடந்த 4 ஆம் திகதி தள்ளிவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமி, குருநாகல் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நீருக்குள் தள்ளப்பட்ட சிறுமி தற்போது குணமடைந்து வருவதாக குருநாகல் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சண்டமாலி சமரகோன் தெரிவித்துள்ளார்.

இறால் வளர்ப்பு தொட்டிக்குள் தனது பிள்ளையைத் தள்ளியதாக கூறப்படும் 20 வயதுடைய தாய், சந்தேகத்தின் பேரில் உடப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான அந்தப் பெண், தனது மகள் தொட்டியில் விழுந்ததாக பொலிஸாரிடம் முதலில் தெரிவித்த போதிலும், இறால் பண்ணையின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் பதிவான காட்சிகளை ஆராய்ந்த போது, சந்தேகநபர் குறித்த சிறுமியை பிடித்து

அவளை தொட்டிக்குள் தள்ளும் காட்சி தெளிவாகத் தெரிந்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறால் தொட்டிக்குள் தள்ளிவிட்டு, பிள்ளையை காணவில்லை எனக் கூறி தேடிய போது, அதே இறால் பண்ணையில் பணிபுரியும் மற்றொரு தொழிலாளி, சிறுமி இறால் தொட்டியில் போராடுவதை பார்த்து அதில் குதித்து காப்பாற்றியதாக கூறினார்.

ஒற்றை இலக்க பணவீக்கத்தை நோக்கி உறுதியாக நகர்கிறது

இலங்கையின் பணவீக்கத்தின் சதவீதம் குறைவடைந்து வருகின்ற போதிலும், வறிய மக்களை பாதிக்கும் வகையில் தற்போதும் உயர் மட்டத்திலேயே காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகரிக்கும் பணவீக்கம் நடப்பு போக்கினை மாற்றியமைக்கக்கூடும் என்பதுடன், பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதால், கொள்கை வட்டி சதவீதத்தை அதிகரித்தமையை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

இந்த நடவடிக்கையானது, பணவீக்கத்தை விரைவாகக் குறைக்கும் மத்திய வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், ஒற்றை இலக்க பணவீக்கத்தை நோக்கி உறுதியாக நகர்வதை இது எடுத்துக்காட்டுவதாகவும் நாணய நிதியம் கூறியுள்ளது.

உறுதியான பணவீக்க வீழ்ச்சியானது சந்தையின் நம்பிக்கையை அதிகரிக்க உதவிபுரியும் என்பதுடன், பாரிய வணிக நிறுவனங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்குமான நிதி நிலைமைகளை இலகுபடுத்துவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதிய செயற்பட்டத்தை இந்த மாதத்துக்குள் செயற்படுத்த முடியும் என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, நாணய மீளாய்வுக் கூட்டத்தின் போது நம்பிக்கை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மீனவர்கள் எல்லை மீறினால் பாரிய போராட்டம் வெடிக்கும்

வடக்கு மாகாண மீனவர் சார் பிரச்சினைகள் குறித்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அகிலன் சுதிர்காமர் தலைமையில் யாழில் உள்ள தனியார் விடுதியில் நேற்று (05) நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவ சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடினர்.

மேலும், இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பதற்கு எதிராக பாரிய போராட்டம் ஒன்றை நடத்தி, ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளிப்பதற்கும் தீர்மானித்தனர். போராட்டம் நடைபெறவுள்ள திகதி தொடர்பில் மீனவ சங்கங்களுடன் கலந்துரையாடி விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதன்போது தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், ஜனாநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தவிர்ந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த போதும் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இம்மாதம் முழுவதும் பழைய விலைக்கு கேஸ்

இந்த நிலையில், தற்போது வரை காணப்படும் எரிவாயுவின் விலை அவ்வாறே தொடரும் எனவும் லிட்ரோ நிறுவனத் தலைவரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதி திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

எனினும், ஐக்கிய அமெரிய டொலரின் அடிப்படையில் இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்ந்துள்ளது. அதனை கவனத்தில் கொண்டே விலை அதிகரிப்பை மேற்கொள்ளாமல் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பழைய விலைக்கே இம்மாதமும் காஸ் விநியோகிக்கப்படும் என்றும் அந்நிறுவனம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடுவீதியில் புரண்டது பௌசர்: ஒருவர் பலி; இருவருக்கு காயம்

இந்தச் சம்பவத்தின் போது நடைபாதையில் நின்றிருந்த நபரொருவர் மரணமடைந்தார். காயமடைந்த மேலுமிருவர் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பௌசர், கொழும்பை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. சம்பவத்தின் போது ஸ்லத்திலேயே மரணமடைந்தவர் பாதசாரியாவார்.

காயமடைந்த இருவரில் ஒருவர், அந்த பௌசரின் உதவியாளர் என்றும் மற்றையவர் வீதியில் பயணித்துக்கொண்டிருந்தவர் என்றும் தெரிவித்த வரக்காபொல பொலிஸார், பௌசரின் சாரதியை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

நால்வர் அடங்கிய குழு அமெரிக்கா பறக்கிறது

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி வசதி தொடர்பில், இருதரப்பு கடன் வழங்குனர்களுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் கலந்துரையாடல் மூலம் அனைத்து தரப்பினரினாலும் சாதகமான மற்றும் நம்பிக்கையான பின்னணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

இதனை அரசாங்கமும் மற்றும் மத்திய வங்கியும் தெரிவித்துள்ளன. இந்நிலையில், அதற்கான அடுத்த கட்ட நகர்வுகளை அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கிறிஸ்டலின் ஜோர்ஜீவா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நிகழ்நிலை ஊடாக, வியாழக்கிழமை (02) தொடர்பு கொண்டிருந்த போதே, ஆரோக்கியமான பதிலை ஜோர்ஜீவா வழங்கியிருந்தார்.

இலங்கை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

சீனப் பிரதமர் லீ க சியாங்குடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தக் கலந்துரையாடலை நடத்தியிருந்தமை விசேட அமைச்சமாகும்.

இலங்கை, பாகிஸ்தான் போன்று, கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கு ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள சீனா தயாராக உள்ளதாக சீனப் பிரதமர் லீ க சியாங், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மற்றுமொரு பின்னடைவை சந்தித்தது இலங்கை

2023ஆம் ஆண்டில் உலக நாடுகளின் தரவரிசை குறித்து பேண்ட் ஃபைனான்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உலகளாவிய சுட்டெண்ணின் படி, இந்த ஆண்டு மந்தநிலையின் அடிப்படையில் மிக உயர்ந்த நிலைமையை தெரிவிக்கும் நாடாகவும் இலங்கை உள்ளது.

எச். எச். விக்ரமசிங்க



மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின்

மாசிமக பஞ்ச இரத பவனி

'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா உன்பாதம் சரண்புகுந்தேன் - எங்கள் முத்துமாரியம்மா'

என்று ஸ்ரீ முத்துமாரியம்மையின் பெருமையைப் பாட்டில் இசைக்கிறார், மகாகவி பாரதியார்.

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும், மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவது போல் மாத்தளை என்றதும் முத்துமாரியம்மைதான் நினைவில் வருகிறார். அருளாட்சி நடத்தும் அன்னையாக நர்த்தன சுந்தரியாக - சிறுமை கண்டு பொங்கும் தேவியாக - மகிஷ்சுர மர்த்தனியாக - கொடுமையைக் கருவறுக்கும் காளியாக - பசிப்பிணி போக்கும் அன்னபூரணியாக, - அரணுடன் கலந்த அர்த்தநாரியாகத் திருக்கோலம் காட்டும் அன்னை முத்துமாரியாக மாத்தளையிலே குடிகொண்டமை நாம் பெற்ற பேறு என்றே கூற வேண்டும்.

இன்று சக்தியின் பிரதான வழிபாட்டு மூர்த்தமாக விளங்குவது மாரியம்மன் திருக்கோலமாகும். மத்தியமலை நாட்டில் ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காக அழைத்துவரப்பட்ட மக்களின் வருகையோடு மாரியம்மன் வழிபாடு, கிராமிய தெய்வ வழிபாட்டு முறையில் தொடர்ந்து, இன்று சிவாகம நெறியில் தழைத்தோங்கியுள்ளது. மாரியம்மன் வழிபாட்டுடன் வளர்ச்சி பெற்று வருவது மலையகத்தில் மாரியம்மன் கலாசாரமாகும்.

இலங்கையில் சைவம் வளர்த்த, சான்றோர்களும், தமிழ் வளர்த்த செம்மல்களும் ஈஸ்வரனை மறவாது நூல்கள் எழுதியுள்ளனர். சிவனை மறந்து செய்யும் தர்மங்கள் வீண் செயல்கள் என்பதை நமது முன்னோர்கள் உறுதியாக நம்பினர். அந்தப் பாரம்பரியம் என்பது அழியாது வேரோடி வந்துள்ளது. அண்மையில் எங்கள் மத்தியில் ஒளிவிளக்காகத் திகழ்ந்த வணக்கத்துக்குரிய யோகர் சுவாமிகளும் 'ஈழம் சிவப்பொழிவு' பெற்ற நாடென பதிவுசெய்துள்ளார்.

ஈழத்தில் நாவலர் பெருமானர் ஆற்றிய சைவத் திருப்பணிகளை, அண்மையில் காசிக்கு விஜயம் செய்த போது, அங்கு வாழும் சைவ பிரகாச வித்தியாசாலை மாணவ பரம்பரையினர், இளைய தலைமுறையினர் எடுத்தியம்பிய போது புளங்காகிதம் அடைந்தேன்.

மலையக மக்களின் முதல் வரலாற்று சாசனம் மாத்தளை ஆகும். மாத்தளை ஸ்ரீ அன்னை முத்துமாரி, மலையக மக்களின் இதய தெய்வம். மாத்தளை என்றால் 'மாசிமகம்'. அன்னை முத்துமாரி திருக்கோவில் பஞ்ச இரத பவனி என்பனவையாகும். மாத்தளையில் மாசிமக மகோற்சவமும் பஞ்ச இரத பவனியும் வெகு பக்திபிரவாகமாக பல்லாண்டு காலமாக விமரிசையாக நடைபெற்று வருவது அம்மாளின் அனுக்கிரகமேயாகும்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபை தலைவர் சேதுராமன் சர்வானந்த தலைமையிலான பரிபாலன சபையினர் உட்பட அனைத்து தொண்டர்களுக்கும் அடியார்களுக்கும் அம்பாளின் அருளாசி பெற வேண்டி துதிக்கின்றோம்.

தன் எழுத்தின் வளத்தால் நன்கறியப்பட்டவரும், இன்று கடல் கடந்த நாடுகளிலும் கௌரவம் பெற்ற இலக்கிய கருத்தா மாத்தளை பெ. வடிவேலன் எழுதிய 'மலையகம் - 200 - இலங்கை இந்திய வம்சாவளி தமிழ் வரலாற்றில் முதல் சாசனம் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்' என்னும் நூல் வெளிவந்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியாகும்.

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும், மலையக நாட்டுப்புறவியலில் மாரியம்மன், முத்து மாரியம்மன் கலாசாரம் உட்பட சுமார் பல நூல்களைப் படைத்துள்ள வடிவேலனின் இப்புனித பணி மேலும் தொடர மாத்தளை அன்னை முத்துமாரி அருள்பாலிப்பாராக.

மலையகத்திலுள்ள ஆலயங்களின் வரலாறு பற்றி இதுவரை ஆய்வுபூர்வமான நூல்கள் வெளிவரவில்லை. வரலாற்றுத் துறையில் ஆழ்ந்த புலமை கொண்ட பேராசிரியர்களின் வழிகாட்டலில் மலையக பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று கூடி இப்பணியை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய கடமையாகும்.

உலகெங்கும் அம்மனின் புகழ் ஓங்குக!

அனைவருக்கும் அம்பாளின் அருளாசி கிட்டுவதாக!

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் - மாத்தளை

அறங்காவல் சபையினர் 2022 – 2023

இடமிருந்து வலம்:
அருணாசலம் சிவக்குமார், செல்லையா தெயராஜ் (செயலாளர்), குமரப்பன் செட்டியார் முத்துக்கருப்பன் செட்டியார் (உப–தலைவர்), விக்னேஸ்வரா சர்வானந்தா (தலைவர்), பெரியசாமி மனோகரன் (பொருளாளர்), கருப்பையா திருநாவுகரசு, பெருமாள் வடிவேல்.

பின்னிரை – இடமிருந்து வலம்:
வேலு அழகேஸ்வரன், அங்கப்பன் ஆசாரியார் திருச்செல்வம், சுப்பையா பிரதீபன், வீரையா முத்துசாமி, அங்கமுத்து செட்டியார் யோகராஜா, கந்தையா கனகரட்னம் (உப–செயலாளர்), இராமசாமி கிருஷ்ணகுமார்.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் தரிசனம்

ந. ரிலக்ஷனா
(4ஆம் வருட மாணவி, ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

நிறைந்த மங்களகரமான வெள்ளிக்கிழமை நாளன்று, எனது குடும்பத்துடன் புங்குடுதீவு நோக்கி புறப்பட்டேன். யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு செல்லும் வரை, பல்வேறு விடயங்களை இரசித்துக்கொண்டு பயணம் செய்திருந்தேன்.

புங்குடுதீவில், ஓர் அழகான தோற்றத்துடன் அமைதியான சுற்றுச்சூழலை கொண்ட பரந்துபட்ட நிலப்பரப்பில் அமைந்த ஓர் கோவிலை வியந்து பார்த்து நின்றேன். இன்னோர் அழகு மிகவும் கவர்ச்சிகரமானதாக எல்லோரையும் கவரும் வகையிலும் அமைந்திருந்தது. ஆகையால் இக் கோயில் பற்றி கூறுவே முனைகின்றேன்.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் அல்லது அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோவில் என்பது, இலங்கையின் வடக்கே புங்குடுதீவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கோவில் ஆகும். இக்கோவில், புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் தெற்குக் கடற்கரை மணற்பரப்பில் ஏறக்குறைய ஆயிரம் பரப்பு நிலத்தில் அமைந்துள்ளது.

இது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் (பூவரசு) ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க 'கண்ணகையம்மாள்' என வழங்கும் கோவில் ஆகும்.

வேண்டுவோர் வேண்டுவதை வழங்கி அருள்புரியும் அன்னையாம் கண்ணகையம்மன் கோவில் கொண்டுள்ள இவ்வாலயத்தின் சிறப்பு சொல்லில் அடங்காததாகும்.

கி.பி 1505 லிருந்து போர்த்துகேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இலங்கையில், புங்குதீவு நிர்வாகத்திலிரில் குறிப்பிடத்தக்கவர் கதிரவேலு ஆறுமுகம் உடையார் ஆவார். இவருக்கு புங்குடுதீவு கிழக்கில் இருந்து தெற்குக் கடற்கரை வரை காணிகள் இருந்தன. இவர் தனது பட்டியிலிருந்து மந்தைகளைக் காலையில் வெளியில் சென்று மேய்ந்து வருவதற்காகத் திறந்து விடுவார். இவரது மாடுகளும் எருமைகளும் வழமைப்பிரகாரம் வெளியில் சென்று வயிறார மேய்ந்து விட்டு, மாலையில் தங்களது பட்டிக்குத் திரும்பி விடும்.

ஒருநாள் மாலையாகியும் அவரது மாடுகள் பட்டிக்குத் திரும்பவில்லை. உடனே உடையார் தனக்கு வேண்டிய சிலருடன் மாடுகள் வழக்கமாக மேயப்போகும் இடங்களுக்குத் தேடிப்போனார். என்னே அதிசயம்! இந்து சமுத்திரத்தின் தென்கிழக்குக் கடற்கரையில் கோரியா என்னும் இடத்தின் ஒருபகுதியில், ஏதோ ஒன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு அவரது மாடுகள் நின்றன. அங்கு சென்று மாடுகளைத் துரத்தினர். ஆனால், மாடுகள் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. அருகில் சென்று பார்த்தபோது அங்கே மாடுகளின் நடுவே ஓர் அழகிய பேழை காணப்பட்டது. சென்றவர்கள் பேழையைத் தூக்கிக் கரைக்குக் கொண்டு வர மாடுகளும் கரைக்குத் திரும்பி வந்தன. கரைக்கு வந்ததும் பெட்டியை ஓரிடத்தில் வைத்தபோது அப்பெட்டி நிலத்தில் இருப்புக் கொள்ளவில்லை. இதனால் திரும்பவும் அவ்விடத்தில் இருந்து தூக்கிக் கொண்டு வந்து நாயன்மார் காடு என்ற இடத்தில் வைத்துத் திறந்து பார்க்க முற்பட்டனர்.

ஆனால், அந்த இடத்திலும் அப்பெட்டி இருப்புக் கொள்ளாததோடு அவர்களால் பெட்டியைத் திறக்கவும் முடியவில்லை. அவர்கள் மீண்டும் அப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு தற்போது இக்கோவில் அமைந்துள்ள இடத்திற்கு வந்தனர்.

அங்குள்ள ஒரு பழைமையான

> நாச்சியார் கோவிலின் புளியமரத்தில் பள்ளி கொண்டிருக்கும் நாகபாம்பு கண்ணகியம்மன், நாகபூஷணியம்மன், முத்துமாரியம்மன் கோவில் உற்வச காலங்களில் அம்மனுக்கு வாயால் பூ எடுத்துச் செல்வதாக

பூவரசம் மரத்தின் நிழலில் வைத்துவிட்டு இளைப்பாறியபின் திரும்பவும் தூக்கினர். ஆனால், அவர்களால் மீண்டும் அப்பெட்டியை அவ்விடத்தில் இருந்து தூக்க முடியவில்லை. இச்செய்தி ஊருக்குள் பரவியதும் பலர் அங்கு வந்து சேர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து தூக்க முயன்றும் முடியாததால் பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதனுள் அழகான ஒளிமயமான அம்பாள் சிலை காணப்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு வயோதிகப் பெண் உருக்கொண்டு அம்பாளே பேசுவது போல் பேச முற்பட்டாள். "நாள் திருவருள் கூட்டிய கண்ணகிப்பெண். என்னுடன் எனது பாதுகாப்பிற்காக இதோ பத்திராளிக்கும் இந்த இடம் பிடித்துக் கொண்ட படியால் இங்கு வந்து சேர்ந்தோம். எங்களை இந்த இடத்திலேயே பிரதிஷ்டை செய்து ஆறுதல்படுத்துங்கள். நன்மை உங்களை நாடி வரும். மற்ற ஆறு சிலைகள் வெவ்வேறு இடங்களுக்குப் போயிருக்கின்றன. அங்குள்ளோர் அவற்றைப் பார்க்கட்டும்" என்று கூறினாள். கண்ணகியாக உருக்கொண்டு அவ்வயோதியப்பெண் கூறியதைக் கேட்ட அனைவரும் பக்தி பரவசமடைந்தனர்.

சில நாள்களுக்கு பின்னர், உருக்கொண்ட அம்மையின் திருவாக்கின்படி ஏனைய சிலைகளும் கரம்பன், காரைநாகர், வட்டுக்கோட்டை, மாதகல், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு அந்தந்த இடங்களில் கண்ணகிக்கு கோவில்கள் அமைக்கப்பட்டன.

ஆறுமுக உடையார் கிராம மக்களுடன் சேர்ந்து கோவில் அமைக்கும் பணியில் இறங்கினார். கட்டடத்திற்குரிய மரங்கள் பெருமளவில் கிடைக்கவில்லை. இந்நிலையில் மறுநாள் இரவு மழையுடன் கூடிய பெரும் புயல் அடித்தில் அதிகமான பனைமரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் கோவில் கட்டுவதற்கான நல்ல மரங்கள் கிடைக்கப் பெற்றன. இம்மரங்களைக் கொண்டு அப்பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தில் கோவில் அமைக்கப்பட்டு, கண்ணகி அம்மனை அங்கு பிரதிஷ்டை செய்து நித்திய பூஜைகள் செய்து வழிபட்டனர். மேலும் இவ்வாலயத்தின் வடக்குப் பக்கமாக சுவலை தெய்வமாகிய பத்திகாளி அம்மனுக்கும் சிறிய கோவில் அமைக்கப்பட்டது.

காலத்திற்கு காலம், கடல்மூலம் கோவிலுக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் கோவில் கரையை வந்தடைந்தன. ஆகம விதிகளுடன் 1880ஆம் ஆண்டு கண்ணாம்புக் கற்களினாலான நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு, நித்திய பூஜைகள் நடைபெறத் தொடங்கின.

ஆடி மாத பூர நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்ட பத்து நாள்களுக்குத் திருவிழா நடைபெற்றது. அதிலும் அதிசயம். கொடியேற்ற திருவிழாவுக்கு முன்னரே, கொடிமரம் கடல்மூலம் கரைக்கு வந்தடைந்தது. 1931ஆம் ஆண்டு இக்கோவில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று, இக்கோவிலின் முதல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இக்கோவிலின் கருவறையில் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாளும், இரண்டாம் மண்டபத்தில் வடக்குப் புறத்தில் தெற்கு முகமாக, தெற்கு வாசலின் ஊடாகச் சமுத்திரத்தை நோக்கியபடி ஸ்ரீ கண்ணகி அம்பாளும் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். 1944ஆம் ஆண்டு இக்கோவிலின் இரண்டாவது கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

வல்லன்பதி இலுப்பண்டை நாச்சியார் கோவிலின் புளியமரத்தில் பள்ளி கொண்டிருக்கும் நாகபாம்பு கண்ணகியம்மன், நயினை நாகபூஷணியம்மன், புளியங்கூடல் முத்துமாரியம்மன் கோவில் உற்வச காலங்களில் அம்மனுக்கு வாயால் பூ எடுத்துச் செல்வதாக கண்ணால் கண்டவர்கள் கூறுகின்றனர்.

1957ஆம் ஆண்டு கண்ணாம்பு கட்டடம் முழுவதும் அழிக்கப்பட்டு, நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு, 1964இல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 1957ஆம் ஆண்டு புதிய ராஜகோபுரம், சித்திரத்தேர் பணிகள் நடைபெற்றன. தற்போது மீண்டும் 2018ஆம் ஆண்டு பாலஷ்தானம் செய்து 500துணி மண்டபதுடன் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கிறார் தாயவள். வரலாற்று சிறப்பு மிக்க சிலப்பதிகாரப் பெருவிழா இக்கோவிலில் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

தே.வ.க.நிலையம் முன்னெடுப்பு

■ வா. கிருஸ்ணா

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டமூலம் தொடர்பில், பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் முன்னெடுத்துவருகின்றது.

தற்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் என்ற காரணத்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், இந்தச் சட்டதிட்டங்களை சரியாகப் பின்பற்றுகின்றார்களா என்பதை, பொதுமக்கள் கண்காணிப்பதற்காக இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, காத்தான்குடியில் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய இணைப்பாளர் எம்.எச். விக்டர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சிராணி தேவகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டதுடன் வேட்பாளர்களும் வாக்காளர்களும் நடந்துகொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கியதுடன் வீதி நாடகமும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பேருக்கு ஒருவர்

புற்றுநோயால் பாதிக்கப்படும் நிலைமை

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பேருக்கு ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்படும் நிலைமை காணப்படுவதாக, இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் டொக்டர் கே. கருணாகரன் தெரிவித்தார்.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், புற்றுநோய் தொடர்பான மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று முன்தினம் (04) மட்டக்களப்பில் நடைபெற்றது.

இலங்கை புற்றுநோய் மருத்துவ சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை ஏற்பாட்டிலும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உட்பட பல்வேறு அமைப்புகள் இந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

எதிர்வரும் காலத்தில், இலங்கையில் ஏற்படும் மரணங்களில் முதல் இடத்தை புற்றுநோய் கொண்டிருக்கும் நிலையேற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளதாகவும் எனவே, இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் புற்றுநோயின் தாக்கம் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளதாகவும் டொக்டர் கே. கருணாகரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று – பொத்துவில் வீதியில்

கார் விபத்து

■ வி. சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில், அக்கரைப்பற்று 241 ஆம் இராணுவ படைப்பிரிவு முகாமின் தேநீர்சாலைக்கு முன்பாக நேற்று (05) அதிகாலை கார் விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

வீதியை விட்டு விலகிய கார், வீதி அருகில் இருந்த சிறிய தூண்களை உடைத்துக்கொண்டு, பள்ளமான இடத்தில் தலை கீழாகப் பிரண்டு கிடந்தது.

காரின் இரு பக்க இலக்கத்தகடுகளும் காணப்படாத நிலையில், காரின் முன்பகுதி மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதுடன், காரின் சில பாகங்கள் ஆங்காங்கே சிதறியும் கிடந்தன.

காரில் பயணம் செய்தவர்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெறாத நிலையில், அக்கரைப்பற்று போக்குவரத்து பொலிஸார், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புதிய சிறார்களுக்கு வரவேற்பு

■ அ. அச்சுதன்

திருகோணமலை கலைவாணி முன்பள்ளியின் 2023ஆம் ஆண்டின் புதிய சிறார்களை வரவேற்கும் நிகழ்வு வெள்ளிகிழமை (03) முன்பள்ளியின் வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலய கல்வி அலுவலகத்தின் உதவி கல்வி பணிப்பாளர் சி .தவநாதன், கௌரவ விருந்தினராக அரசடி மிரிவை சேர்ந்த கிராம உத்தியோகத்தர் ரூமி, சிறப்பு விருந்தினராக பட்டணமும் சூழலும் பிரதேசத்தின் ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி அமுதியா கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு

மருத்துவ உபகரணம் அன்பளிப்பு

■ வீரி சுகாதேவராஜா

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு கோடி 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இராா. முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

ஜூட் மசாடோ மூலமாக இங்கிலாந்தைச் சேர்ந்த De Soutter Medical Ltd என்ற மருத்துவ உபகரண உற்பத்தி நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலையின்

பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரனிடம் நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் டொக்டர் புஷ்பலதா லோகநாதன், கலாநிதி நாகலிங்கம் பிரசாந்தன், எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் எஸ். வருண்பிரசாந் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வீடுக்குள் புதையல் தோண்டிய மூவர் கைது

■ எம். முபாரக்

கந்தளாய், 91ஆம் கட்டை ஜனசவி மாவத்தை பகுதியில் வீட்டுக்குள் புதையல் தோண்டிய வீட்டு உரிமையாளர் உட்பட மூவர் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், கந்தளாய், திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

வீட்டின் அடிப்பாகத்தில், 15 அடி வரை தோண்டிக் கொண்டியிருந்த போது, இவர்கள் கைது செய்யப்பட்டனர். தோண்டிய இடத்தில் அலவாங்கு, மண்வெட்டி நீர் இறைக்கும் இயந்திரம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதன.

வவுனியாவில் அரச ஊழியர்களுக்கு காணி

முரண்பாடுகள் தொடர்பில் தகவல் கோரல்

■ க. அகரன்

வவுனியா அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில், மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக தகவல் கோரப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு ஒவற்றையில் காணி வழங்குவதற்காக 2010ஆம் ஆண்டளவில் அரச ஊழியர் வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. இதன்போது, சுமார் 700 இற்கும் மேற்பட்ட காணிதுண்டுகள் அரச ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் 219 பேருக்கு காணி துண்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, ஏற்கெனவே காணி வழங்கப்பட்டு அதில் வசிக்காதவர்களின் காணிகளை சுவீகரித்து வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தற்போது பயனாளிகள் தெரிவுப் பட்டியல் வெளியிடப்பட்டு, எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகள் செய்யமுடியும் என பிரதேச செயலாளரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த திட்டத்தில் அரச ஊழியர்களிடம் பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்படவில்லை எனவும் தகுதியற்றவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில், இவ்விடயங்களின் உண்மைத்தன்மை தொடர்பில் அறிவதற்காக சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் ஊடாகத் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பயனாளிகளை தெரிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்ட முறை? விண்ணப்பம் விளம்பரப்படுத்தியமைக்கான சான்று, விண்ணப்பம் கோரிய காலப்பகுதி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை உட்பட பல்வேறு தகவல்கள் குறித்த தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

"பஸ் நடத்துநர், சாரதிகள் இல்லாமையால்

சீரான சேவைகளை வழங்க முடியாதுள்ளது"

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவையான பஸ் நடத்துநர்கள், சாரதிகள் இன்மை காரணமாக, சீரான போக்குவரத்து சேவைகளை வழங்க முடியாது உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதாவது, சில பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, மாவட்டத்தில் சேவையில் ஈடுபடக்கூடிய வகையில் 28 பஸ்கள் உள்ளன. ஆனாலும் 14 வரையான சாரதிகளும் 14 நடத்துநர்களும் வெற்றிடங்களாக உள்ளதால், முழுமையான சேவைகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள்

■ வா. கிருஷ்ணா

குழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் கஸ்ட்டப்பட்ட மக்களை இனங்கண்டு, அவர்களின் உணவு தேவையை நிவர்த்திசெய்யும் நோக்கில், உலர்உணவு பொதிகள் இரண்டாம் கட்டமாக ஒட்டுசுட்டான், கறுதுறைப்பற்று ,புதுக்குடியிருப்பு பிரதேசங்களை சோந்த 50 குடும்பங்களுக்கு வெள்ளிக்கிழமை (03) வழங்கப்பட்டன.

வறுமைக்கு உட்பட்ட குடும்பங்கள், தங்கள் உணவு செலவை சேமித்துவைத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு தலா 10,000 ரூபாய் பெறுமதியான பொருட்களை வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு

வீடு கையளிப்பு

■ வா. சீதாஞ்சன்

வவுனியா, மூன்று முறிப்பு கிராம அலுவலகர் பிரிவில் மககுவைத்த குளம் கிராமத்தில் பெண்தலைமைத்துத்தைக் கொண்ட றாதிகா ஜெகதீஸ்வரன் என்ற குடும்பத்துக்கு வீட்டுத்திட்டத்தை புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

தாய் தமிழ்ப் பேரவை தலைவர் ச. ரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மக்கள் நல்வாழ்வு மையத்தின் ஒழுங்கமைப்பில் அச்சுவேலியை சேர்ந்த அமரர் ஜெகசோதி சிவக்கொழுந்தின் பிறந்த நாளை முன்னிட்டு, ஜேர்மனில் வசித்துவரும் அவரின் மகளான சுஜாதா சுகனின் முழுமையான நிதிப்பங்களிப்பில், மக்கள் நல்வாழ்வு மையத்தின் 72 ஆவது வீடு கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (03) நடைபெற்றது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில்

உலக உடற்பருமன் எதிர்ப்பு தினம்

■ நிதர்சன் வினோத்

உலக உடற்பருமன் எதிர்ப்பு தினம் சனிக்கிழமை (04) தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் றொமான்ஸால் ஆராம்பித்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தசிசாலை வெளிநோயாளர் பிரிவில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த நிகழ்வில், உடற்பருமன் பற்றிய விழிப்புணர்வு, ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், உடல்திணிவுச் சுட்டி அளவிடல், உடற்பயிற்சியின் நன்மைகள் போன்றவை தொடர்பான கண்காட்சி, விழிப்புணர்வு ஊட்டும் செயற்பாடுகள், தெளிவூட்டல்கள் போன்றவற்றை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் வழங்கிவருகின்றார்கள்.

'உடற்பருமன் பற்றிக் கதைப்போம்' என்னும் தொனிப்பொருளில் நடைபெறும் இந்த நிகழ்வில், அனைவரையும் பங்குகொண்டு பயன்பெற்று, ஆரோக்கியமாக வாழுமாறு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

தள்ளிப்போவதால் தடுமாறும் மக்கள்

■ ரஜீத் ராஜபக்ஷ

கிளிநொச்சி மின் பொறியியல் காரியாலயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் ஹட்டன் ருவன்புர கொலனியில் வசிக்கும் மின் பாவனையாளர்களுக்கான மின்கட்டண பட்டியல், 10 நாள்கள் தாமதித்தே வழங்கப்படுகின்றன. இதனால் தாங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகக்கொடுப்பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

2023 பெப்ரவரி மாதத்துக்கான மின்கட்டண பட்டியல் 40 நாள்களுக்கு பின்னரே வழங்கப்பட்டுள்ளது. அதில், ஆகக்கூடுதலான கட்டண தொகையும் குறிப்பட்டப்பட்டுள்ளது என்றும் அம்மக்கள் தெரிவித்தனர்.

மின் நுகர்வோருக்கான மின்கட்டணம் 30 நாள்களுக்கு ஒரு தடவை மாதாந்தம், இலங்கை மின்சார சபையால் விநியோகிக்கப்படவேண்டும். ருவன்புர கொலனி மக்களுக்கு ஜனவரி மாதத்துக்கான மின்கட்டண பட்டியல்

2023.01.22, 23 ஆம் திகதிகளிலேயே விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பெப்ரவரி மாதத்துக்கான மின்கட்டண பட்டியல், மார்ச் 4ஆம் திகதி, அதாவது 40 நாள்களுக்குப் பின்னர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாவிக்கப்பட்ட மின் அலகுகள் அதிகரித்துள்ளன. ஆகையால் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. இதனால் தாங்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகக்கொடுத்துள்ளதாக அப்பிரதேசத்தைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தையே வாழ்வாதாரமாக செய்து வரும் தங்களால் இந்த மின்கட்டணத்தை கட்ட முடியவில்லை என்றும், கடந்த மாதங்களில் வீடுகளுக்கு வாங்கிய மின்கட்டணத்தை விட புதிய கட்டண பட்டியலின் பிரகாரம் அதிக கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அந்த மின்நுகர்வோர் தெரிவித்தனர்.

ஹட்டன், ருவன்புர கொலனியில், மின்சார மீற்றர் வாசிப்பாளரிடம், 40 நாள்கள் கடந்தும் மின்கட்டணம் வரவில்லை என வினவியபோது அவர் எதுவும் கூறவில்லை என்றும், 30 நாள்களுக்கு ஒருமுறை மின்கட்டணத்தை வழங்குவதாக மீற்றர் வாசிப்பாளர் கூறியதாகவும் ருவன்புர காலனி மின் நுகர்வோர் தெரிவித்தனர்.

நடத்துநர் நல்லவர்

தனியார் பஸ்ஸொன்றுக்குள் விழுந்து கிடந்த 40 ஆயிரம் ரூபாய் அடங்கிய பணப்பையை அந்த பஸ்ஸின் நடத்துநர். உரிய பயணியிடம் ஒப்படைத்துள்ள சம்பவம் ஹட்டனில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த பஸ்ஸில், சனிக்கிழமை (04) தவறவிடப்பட்ட பணப்பையையே உரியவரிடம் நடத்துநர் சாம குமாரவால் நேற்று (05) கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டையில் இருந்து சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு புறப்பட்ட தனியார் பஸ்ஸில் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த 13 பேர் அடங்கிய குழுவொன்று பயணிக்க உள்ளது என, அந்த குழுவைச் சேர்ந்த ஒருவர் நடத்துநருக்கு அலைபேசி அழைப்பை எடுத்து உறுதிப்படுத்தியுள்ளார்.

அந்தக் குழுவைச் சேர்ந்த அனைவருக்கும் ஆசனங்களை ஒதுக்கமுடியாது என நடத்துநர் தெரிவித்துள்ளார். எனினும், அலைபேசி அழைப்பை எடுத்து ஆசனங்களை ஒதுக்கிய நபர், சாரதிக்கு அருகிலுள்ள பொனட்டில் அமர்ந்து பயணித்துள்ளார்.

அவர், வட்டவளையில் இறக்கிக்கொண்டார். எனினும்,

தன்னுடைய பணப்பை காணாமற்போனத்தை அறிந்து, நடத்துநருக்கு அலைபேசி வழியாக அறிவித்துள்ளார். அதன்பின்னர், பொனட்டில் இருந்த பயணப்பொதிகளை அப்புறப்படுத்திவிட்டு பார்த்தத்தில் பணப்பொதி விழுந்து கிடந்துள்ளது.

அதனை எடுத்த நடத்துநர், உரிய பயணியிடம் ஒப்படைத்துள்ளார். கொழும்பில் வேலை செய்யும் பயணி, நீண்ட நாள்களுக்குப் பின்னர் நீண்ட விடுமுறையில் தன்னுடைய சொந்த ஊருக்கு திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரதெல்ல விபத்தில் சிக்கியோருக்கு மனிதாபிமான உதவி வழங்கல்

■ சுதந் எல்.எம்.ஹூஸைனா

நுவரெலியா- ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற விபத்தில் மரணித்தவர்களின் உறவினர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு கொழும்பு தேஸ்டன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால், மனிதாபிமான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் வைத்து இந்த மனிதாபிமான உதவிகள், வெள்ளிக்கிழமை (03) வழங்கிவைக்கப்பட்டன.

கொழும்பு தேஸ்டன்

கல்லூரியின் மாணவர்கள், ஜனவரி மாதம் 20ஆம் திகதி நுவரெலியாவுக்கு கல்விச் சுற்றுலா சென்றிருந்தனர். அவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ், கொழும்புக்கு திரும்பும் வழியில், ரதெல்ல குறுக்கு வீதியில் ஒட்டோ மற்றும் வானுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்தச் சம்பவத்தில், டிக்கோயாவை வசிப்பிடமாகக் கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் வானின் சாரதியும் மரணமடைந்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்து தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் மாணவிக்கு, தொடர்ந்து சிகிச்சை அளிப்பதற்காக, எட்டு இலட்சம் ரூபாய் நிலையான கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கும் நிதியுதவிகள், தேஸ்டன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் வழங்கிவைக்கப்பட்டன.

பயணிகளுடன் வேகமாக ஓடிய 2 பஸ்கள் சிக்கின

■ ரஜீத் ராஜபக்ஷ

பயணிகளை ஏற்றிக்கொண்டு அதிக வேகத்தில் பயணித்த தனியார் பஸ்கள் இரண்டு, ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகள், தமது பொறுப்பின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தியதில் அவ்விரு பஸ்களுக்கும் வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பலாங்கொடையில் இருந்து ஹட்டன்

வரையிலும் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு பயணித்த தனியார் பஸ்கள் இரண்டே இவ்வாறு தமது பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விரு பஸ்களிலும் பயணித்த பயணிகளாவ், ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே, திடீர் சோதனைக்கு உட்படுத்திய போக்குவரத்துப் பொலிஸார், அவ்விரு பஸ்களையும் தமது பொறுப்பின் கீழ் கொண்டுவந்தனர்.

அவ்விரு பஸ்களைச் சேர்ந்த சாரதிகளும் டிக்கோயா பிரதேசத்தில் வைத்து பிரதான வீதியை மறித்து பஸ்களை நிறுத்திவிட்டு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். பஸ்களின் நடத்துநர்கள் இருவரும் தூஷன வார்த்தைகளை பேசியதுடன் மிகவும் ஆக்ரோஷமாக நடந்து கொண்டுள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இன்று பயிற்சி

■ ஆர்.ரமேஸ்

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்பாடு செய்துள்ள 'தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாப்போம்' எனும் தலைப்பிலான பயிற்சி ஹட்டன் LAA Adams hotel மண்டபத்தில் இன்று (06) காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை நடைபெறவுள்ளது.

18 வளைவுகளுக்கு சனி முதல் பூட்டு

கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் 18 வளைவு வீதி, சனிக்கிழமை (04) முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பாறைகள் மற்றும் மண்மேடுகள் சரிந்து வீதியில் வீழ்ந்ததன் காரணமாகவே, குறித்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை

காரணமாக வீதியின் 13, 14 ஆவது வளைவுகளுக்கு இடையிலான பிரதேசத்தில் மண் மேடுகள் சரிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், குறித்த வீதியின் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

இதன்படி அந்த வீதியை பயன்படுத்தும் சாரதிகளை மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சிறுமி துஷ்பிரயோகம்; அதிபரை அள்ளினர்

பலாங்கொடை, பின்னவல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையில் பயிலும் மாணவி ஒருவரை, பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் கீழ், அந்த அதிபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் 11 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாகவும், பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான 50 வயதுடைய அதிபர் பலாங்கொடை, அல்லராவ பிரதேசத்தில் வசிப்பவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரை பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருவரும் சித்தி

■ நுபாறூா மலர்வேந்தன்

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் யோகராதன் சஷ்வின் (165) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இதேவேளை, பசறை இலக்கம் 02 தமிழ் வித்தியாலய மாணவி ஜெயம் பிரணித்தா 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

சிவன் பாதத்தை தரிசிக்க யாத்திரிகர் படையெடுப்பு

■ சுதந் எல்.எம்.ஹூஸைனா

மாசிமகமான இன்று (06) மெதின் போயா தினமாகும். இந்தப் போயா தினத்துடன், கடந்த இரண்டு நாள்களும் விடுமுறை தினங்கள் என்பதால், சிவனொளிபாதமலைக்கு வருகைதந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

மஸ்கெலியா- நல்லத்தண்ணி ஊடாக சிவனொளிபாதமலைக்கு ஏறியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டதாக நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களை ஏற்றிவந்த வாகனங்கள், மஸ்கெலியா-நல்லத்தண்ணி வீதியில் நீண்ட வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்றவகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன எனத் தெரிவித்த நல்லத்தண்ணி போக்குவரத்து

பொலிஸார், பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்றனர்.

இதேவேளை, போதைப்பொருட்களுடன் வருவோரை கைது செய்வதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சனிக்கிழமை (04) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் வந்த இளைஞர்கள் அறுவர் கைது செய்யப்பட்டனர்.

இத்தாலி இளைஞனிடம் கைவரிசை; ஒருவருக்கு சிறை

■ வேதன் வெளவிந்த

இத்தாலி நாட்டு இளைஞனிடம் ஒரு இலட்சத்துக்கு 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உயர் ரக அலைபேசியை களவெடுத்த குற்றச்சாட்டின் கீழ், கண்டியைச் சேர்ந்த ஒட்டோ சாரதியொருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர், கண்டி பிரதான நீதவான் ஸ்ரீநிதி விநோசேகர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது அவருக்கு இரண்டு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறைத்தண்டனையும் 1,500 ரூபாய் அபராதமும் விதித்தார்.

அத்துடன் களவாடப்பட்ட அலைபேசியை, இத்தாலி இளைஞனிடம் கையளிக்குமாறும் பிரதான நீதவான் உத்தரவிட்டார். சுற்றுலாப் பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் யாரும் நடந்துகொள்ளக்கூடாது என்றும் கடுமையாக எச்சரித்து அறிவுறுத்தினார்.

இத்தாலி நாட்டு இளைஞனும் மற்றுமொரு யுவதியும் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து தலதாமாளிகையை பார்வையிடுவதற்காக ஒப்க ஊடாக பதிவு செய்துள்ளனர். அந்த ஒட்டோவில் போகும் போது, அலைபேசியை அவர் ஒட்டோவில் தவறவிட்டுள்ளார். அதுதொடர்பில் ஒட்டோ சாரதியின் அலைபேசிக்கு அழைப்பை எடுத்து விசாரித்தபோது, அப்படி எந்தப் பொருளும் தவறவிடப்படவில்லை என்று ஒட்டோ சாரதி பதிலளித்துள்ளார்.

இதுதொடர்பில் கண்டி, சுற்றுலாப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். 'அப்பிள் வகை அலைபேசியை கண்டறியும் தொழில்நுட்பத்தின் ஊடாக, அலைபேசி இருந்த இடத்தை கண்டறிந்த பொலிஸார், அலைபேசியுடன் ஒட்டோ சாரதியை கைது செய்தனர். அதன்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே பிரதான நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இருவருக்கும் மேற்பார்வை பொறுப்பு

ஜனாதிபதி செயலகத்தின் மலையக கல்வி பிரிவின் மேற்பார்வை பொறுப்பாளராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுணபதி கனகராஜ் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்சங்க பிரிவின் பொறுப்பாளராக மத்திய மாகாண சபையின் முன்னாள் தலைவர் மதியுகராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மலையக பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்காகவும், தொழிற்சங்க ரீதியாக

பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'மெனிகே' மோதி ஐயசேகர பலி

படுகாயமடைந்த 50 வயதான நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, கோட்டையில் இருந்து பதுளையை நோக்கி சனிக்கிழமை (04) பயணித்துக்கொண்டிருந்த உடரட்ட மெனிகே ரயிலில், இதல்கல்ஹறின்ன பிரதேசத்தில் வைத்து நபரொருவர் மோதுண்டு மரணமடைந்துள்ளார்.

இதல்கல்ஹறின்ன, உடபிலித்தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஆர். எம்.ஜயசேகர (வயத 50) என்பவே உயிரிழந்துள்ளார் என ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அந்த நபரை ரயில் பயணிகள் தூக்கிச் சென்று, இதல்கல்ஹறின்ன பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சங்கு விற்க முயன்ற இருவருக்கு அபராதம்

■ எஸ். ஆரூரச்சி

கேகாலை, அஸ்ஸாரிகல பிரதேசத்தில் அரியவகையான சங்கை விற்பனை செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா 60 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம்

ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனை, பன்னம்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27, 23 வயதான அவ்விருவரும் கேகாலை மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதன்போதே நீதவான் மேற்கண் அபராதத்தை விதித்தார்.

நிறைவேற்றுத் துறையின் தலையிலேயே குட்டிய நீதித்துறை

பெப்ரவரி 23ஆம் திகதி, பாராளுமன்றத்துக்கு வருகைதந்து, உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை; நடத்துவதற்கு தேர்தல் ஒன்றில்லை" எனக் கூறியதையடுத்து கொதித்தெழுந்த ஐக்கிய மக்கள் சக்தியினர், "ஜனநாயக உரிமையை தா", "தேர்தலை நடத்து" போன்ற கோஷங்களை எழுப்பினர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த எம்.பிக்கள், சபையின் நடுவே இறங்கி, செங்கோலுக்கு அருகில் செல்லமுயல்களில், தன்னுடைய ஆசனத்தில் இருந்து எழுந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் இருந்து வெளியேறிவிட்டார்.

ஆர்ப்பாட்டம், அக்கிராசனத்தை மறைத்து முன்னெடுக்கப்பட நிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் இந்த உரைக்குப் பின்னர், சமூக வலைத்தளங்களிலும் பொது வெளிகளும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, கேலியும் கிண்டல்களும் உச்சம் தொட்டன. அந்தளவுக்கு ஒவ்வொரு விடயத்தையும் 'புட்டுப்புட்டு' வைத்துமட் கேலி செய்தனர்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே தனது முதல் மூன்று தெரிவுகளாகும் என்று, பொதுவெளியில் உரையாற்றும் போது ஜனாதிபதி கூறிவருகின்றார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் மாற்று கருத்தில்லை. எனினும், ஜனநாயக உரிமையை பாதுகாப்பதற்காக தேர்தலை நடத்தவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. இதில், நிறைவேற்றுதிகாரம் தலையிடக்கூடாது; தலையிடவும் முடியாது.

நிறைவேற்று அதிகார பீடத்துக்கும் நிதித்துறைக்கும் இடையே முரண்பாடு ஏற்படக்கூடியதாக செயற்படுவது, ஜனநாயகத்தை ஆபத்துக்கு உள்ளாக்கி விடும் என்பதே பதார்த்தபூர்வமான உண்மையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில், '52 நாள் ஆட்சி' நிறைவேற்று, நிதித்துறை மற்றும் சட்டவாக்கம் ஆகிய மூன்று தூண்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாட்டை தோற்றுவித்திருந்தது. இறுதியில் நிதித்துறையின் தீர்ப்புக்கு தலைவணங்க வேண்டிய நிலைமை, ஏனைய இரு தரப்புகளுக்கும் ஏற்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்ற சாக்குப்போக்கை கூறிவந்த ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் அதன் பங்காளிகளின் தலையில் ஒங்கி ஒரு 'குட்டு'ப் போட்டதைப் போல, 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை, யாரும் தடுத்துவைத்திருக்க முடியாதென உயர்நீதிமன்றத்தால் மார்ச் 3ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு, ஜனநாயகத்துக்கு கிடைத்த தீர்ப்பாகுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான விசாரணையின் போது, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆக, உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் பிரகாரம், மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தவேண்டும். ஆக, அதற்கு இன்னும் இரண்டுவார காலமே இருக்கிறது. அதற்குள் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்துவதே சால சிறந்தது. இல்லையேல், மூன்று தூண்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு, ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்திவிடும் என்பதே எமது அவதானிப்பாகும்.

தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


SRI LANKA
SL
$
Sh
Sh...
Sh...
Sh...

SLT–MOBITEL இனால் மீரிகமவில்

மர நடுகை, புத்தக நன்கொடை திட்டங்கள் முன்னெடுப்பு

இளம் சந்ததியினரின் அறிவு விருத்திக்கு பங்களிப்பு வழங்குவது, சூழலைப் பாதுகாப்பது மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்புவது போன்றவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், SLT-MOBITEL தனது சூழல்சார் சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சித் திட்டத்தை புத்தாண்டிலும் முன்னெடுத்திருந்தது. அதற்கமைய, மீரிகம, தவலம்பிட்டிய மகா வித்தியாலயத்தில் புத்தகங்கள் நன்கொடை மற்றும் இலுப்பை மர நடுகைத் திட்டம் ஆகியவற்றை முன்னெடுத்திருந்தது.

SLT-MOBITEL இன் சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த குரியாரச்சி மற்றும் சில இதர ஊழியர்கள், பாடசாலையின் அதிபர் மற்றும் ஊழிய அங்கத்தவர்களுடன், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

SLT-MOBITEL இன் "நாடு முழுவதிலும் சுவாசத்தையும், உரத்தையும் பயிரிடுவோம்" எனும் திட்டத்தின் 9ஆவது நடவடிக்கையாக மீரிகம பிரதேசத்தில் இலுப்பை மர நடுகைத் திட்டம் அமைந்திருந்தது. இந்தத் திட்டத்தினூடாக, வளியின் தரத்தை மேம்படுத்துவது, பச்சை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தை தணிப்பது மற்றும் மண் வளத்தை மேம்படுத்துவது போன்றன இலக்காக அமைந்துள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், 50 இலுப்பை மரக் கன்றுகள் பயிரிடப்பட்டிருந்தன. இதுவரையில் SLT-MOBITEL இனால் இது போன்ற திட்டங்கள் மொனராகலை, உமந்தாவ, அனுராதபுரம், குண்டசாலை போன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் போது, SLT-MOBITEL இனால் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், நூலகத்தை மறுசீரமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதனூடாக, இந்தப் பாடசாலையில் பயிலும் 400 க்கும் அதிகமான மாணவர்களுக்கு தமது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும், வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்து கொள்ளவும் வலுவூட்டப்படுகின்றது. SLT-MOBITEL இன் ESG நிகழ்ச்சியினால் சூழலை பாதுகாக்கும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதற்கு நிறுவனங்களுக்கு வழிகாட்டப்படுவதுடன், சமூகத்தின் நலனை மேம்படுத்துவதிலும், காலநிலை இடர்களை நிர்வகிப்பதற்கு உதவுவதிலும் கவனம் செலுத்தப்படுகின்றன.

டயலொக் ஆசிஆட்டாவுக்கு ACCA இடமிருந்து விருது

ACCA இன் 'நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள் 2022' இல், டயலொக் ஆசிஆட்டா பிளல்சி நிறுவனம் வெற்றியாளராகவும், பொதுச் சேவைகள் பிரிவில் வெற்றியாளராகவும் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான விருதுகள் தொடர்பாக பல்வேறு தொழில்துறைகளைச் சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவிலான ஏராளமான விண்ணப்பங்களை பெற்றிருந்தபோதிலும், அவற்றுள் டயலொக் நிறுவனமே அதன் விரிவான மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட நிலைத்தன்மை அறிக்கைக்காக அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி டயலொக் நிறுவனமானது, நாட்டின் முதல் மூலோபாயம், நிலைத்தன்மை சிக்கல்களின் பொருள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக நடுவர் குழுவால் பாராட்டப்பட்டது. மேலும், இது டயலொக்கின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ACCA இடமிருந்து இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாங்கள் பெருமையடைகிறோம், இது நிலைத்தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது என டயலொக் ஆசிஆட்டா பிளல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுள் வீரசிங்ஹ தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் நிலைத்தன்மை என்பது எங்கள் வணிக மாதிரியின் மையப் பொருளாக அமைந்துள்ளது, மற்றும் நாம் செய்யும் எல்லா விடயங்களிலும் அதுவே நமது நோக்கமாக உட்பொதிந்துள்ளது. அதற்கமைய, சமூகத்தில் எங்களின் தாக்கத்தையும், நிலைத்தன்மை அறிக்கையின் தரத்தையும் தொடர்ந்து மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நமது பங்குதாரர்கள் அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை நோக்கி நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் எனவும் குறிப்பிட்டார்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்ற ACCA நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதானது, வணிக உத்தி, பெருநிறுவன நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான வலுவான தொடர்பை மேம்படுத்தி, நிலைத்தன்மை அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரித்து விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. இந்த விருதுகள் அறிக்கையிடல் மற்றும் நடைமுறைகளில் நிலைத்தன்மைக்கு உறுதிபூண்டுள்ள நிறுவனங்களை ஊக்குவித்து அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை வெற்றிகரமாக நிறைவு

13ஆவது தடவையாக முன்னெடுக்கப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை வெற்றிகரமாக நிறைவடைந்தது. யாழ்ப்பாணம் தொழிற்துறை மன்றத்துடன் இணைந்து, இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'வடக்கின் நுழைவாயில்' (gateway to the North) என அறியப்படும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தையானது, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தமது தயாரிப்புக்களை வடக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக மிகவும் எதிர்பார்க்கும் ஒரு தளமாகும். கடந்தகாலங்களில் இக்கண்காட்சியில் பங்குபற்றிய தொழில்முயற்சியாளர்கள் வடக்கில் தமக்கு இருக்கக்கூடிய சாத்தியங்களை நேரடியாகக் கண்டுகொண்டனர் என நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வில் பங்கேற்றிருந்த சில நிறுவனங்களின் காட்சிகூடங்களையும், நிகழ்வை வட மாகாண சபையின் ஜீவன் தியாகராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பார்வையிடுவதையும் காணலாம்.

வெங்கலூர்

அதிரடி அறிவிப்பை வெளியிட்டது 'Foxconn'

மகிழ்ச்சியில் இந்தியர்கள்

அப்பிள் நிறுவனத்துக்குத் தேவையான ஐபோன் ஸ்மார்ட் தொலைபேசிகளை உற்பத்தி செய்து வழங்கும் ஃபாக்ஸ்கொன் (Foxconn) நிறுவனமானது இந்தியாவில் பெங்களூரில் 700 மில்லியன் டொலர்கள் மதிப்பில் புதிய தொழிற்சாலையொன்றை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அண்மையில் ஃபாக்ஸ்கொன் தலைவர் 'யங் லியூ டெல்லியில்' பிரதமர் மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடிய நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் "அண்மைக்காலமாக சீனா - அமெரிக்கா இடையிலான உறவு சீர்குலைந்து வரும் நிலையில், வர்த்தகத்துக்கு உகந்த சூழலை இந்தியா வழங்கும்" எனவும் அந்நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் பெங்களூர் விமான நிலையம் அருகே சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாகக் குறித்த தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது இத்தொழிற்சாலையால் இந்தியர்கள் சுமார் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் கூறப்படுகிறது.

டெல்லி

மூச்சக்கர வண்டியில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர்

ஜி-20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, அமெரிக்க வெளியுறவு அமைச்சராான அண்டனி பிளிங்கன், (Antony Blinken) அண்மையில் இந்தியாவுக்கு வருகை தந்தார்.

இதனையடுத்து குறித்த மாநாட்டில் கலந்துகொண்ட அண்டனி பிளிங்னுக்கு தூதரக அதிகாரிகளின் ஏற்பாட்டில் முச்சக்கர வண்டி சவாரியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்க - இந்தியாவிற்கு இடையேயான நட்புறவை வலுப்படுத்த உதவியதற்காக தூதரக ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள பிளிங்கென், முச்சக்கர வண்டியில் பயணம் செய்த படங்களையும் தனது ட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.

இந்தியா

75 ஆண்டுகளுக்குப் பின்னர் இணைந்த உறவுகள்

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது பிரிந்த இரு சீக்கிய சகோதரர்களின் குடும்பங்கள் 75 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இணைந்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுதந்திரத்திற்கு முன்னர் ஹரியானாவில் கோம்லா என்ற கிராமத்தில் குறித்த சகோதரர்களான குருதேவ் சிங் மற்றும் தயா சிங் யறைந்த தங்களது தந்தையின் நண்பரான கரீம் பாஷ் உடன் வசித்து வந்துள்ளனர். டி.

இந்நிலையில் 1947 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரிவினையின் போது பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திற்கு குருதேவ் சிங் உடன் கரீம் பாஷ் புலம்பெயர்ந்தார் எனவும், ஹரியானாவில் உள்ள தனது உறவினரது வீட்டில் தயா சிங் இருந்துவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> மலர்கள் தூவி மகிழ்ச்சியாக மீண்டும் ஒன்றிணைந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின்றது

இதனிடையே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு குருதேவ் சிங் காலமானார். அவர் இறப்பதற்கு முன், தனது சகோதரர் தயா சிங்-கை கண்டுபிடித்து தரும்படி இந்திய அரசுக்கு பலமுறை கடிதம் அனுப்பியதாக குருதேவ் சிங்-கின் மகன் முகமது ஷரீப் கூறினார்.

இந்நிலையில், சமூக வலைதளம் மூலம் முகமது ஷரீப் தனது சித்தப்பா தயா சிங்-கை கண்டுபிடித்தார். 75 ஆண்டுகளுக்கு முன் பிரிந்த குருதேவ் சிங், தயா சிங்-கின் குடும்பத்தினர் ஆட்டம் பாட்டத்துடன் மலர்கள் தூவி மகிழ்ச்சியாக மீண்டும் ஒன்றிணைந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின்றது.

தூத்துக்குடி

தூத்துக்குடியில் பூரான் பிரியாணி

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் பிரபல அசைவ உணவகமொன்று உள்ளது. இந்நிலையில் அண்மையில் குறித்த உணவகத்திற்குச் சென்ற 'அன்பு' என்பவர் அங்கு' கோழி பிரியாணி, சிக்கன் 65' என்பவற்றை ஒடர் செய்துவிட்டு தொலைபேசியில் மூழ்கியவாறே உணவருந்தியுள்ளார்.

இதன்போது எதிர்பாராத விதமாக இலையில் பிரியாணியுடன் வேகவைக்கப்பட்ட பூரான் ஒன்று கிடப்பதை கண்டு அவர் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இதனையடுத்து இது குறித்து உணவக ஊழியரிடம் அவர் தெரிவித்த போதும் அதற்கு அந்த ஊழியர் "பூரான் தானே கிடந்தது பூனையா இறந்து கிடந்தது ?" எனக் கேட்டுள்ளதோடு இது குறித்து உணவக உரிமையாளரிடமும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அன்புவிடம் "நீங்கள் உட்கொண்ட பிரியாணிக்கு பணம் வேண்டாம் "என்று கடை உரிமையாளர் கூறியதாகவும், அதற்கு அவர் "தான் பிரியாணியை முழுமையாக உட்கொண்டு விட்டதாகவும், அதற்கு பணம் வாங்கிக் கொள்ளுமாறும், இனி இது போன்று கவனக்குறைவாக இருக்க வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வாழைச்சேனை

சாம்பலைக்கொண்டு ஹோலி கொண்டாட்டம்

இந்தியா முழுவதும் வருகின்ற 8ஆம் திகதி ஹோலி பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கோயில்களில் ஹோலி பண்டிகை கொண்டாட்டம் களைகட்டத் தொடங்கியுள்ளது.

அந்தவகையில் மணிகர்ணிகா காட் பகுதியில் சாம்பலை வைத்து விளையாடும் ஹோலி நாடு முழுவதும் பிரபலமடைந்து வருகின்றது.

இங்கு ஹோலி பண்டிகை கொண்டாடவும், அதனை பார்ப்பதற்கும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் குவிந்தனர்.

இதேபோல் மதுராவில் உள்ள விருந்தாவனத்தில் வெளிநாட்டினர்கள் ஹோலி கொண்டாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கேரளா

அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை நிலையத்திற்குத் தீ வைத்த இளைஞர்



கேரள மாநிலம் திருப்புணித்துறா பகுதியைச் சேர்ந்த ராஜேஷ். இவர் "அதிஷ்ட இலாபச் சீட்டுகள் விற்கும் கடைகளால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும், அதனை விற்கும் வியாபாரிகள் செல்வத்தில் கொழிப்பதாகவும் இது தடுக்கப்பட வேண்டும்" என்றும் தெரிவித்து அண்மையில் முக நூலில் வீடியோ ஒன்றை வெளியிட்டார் .

மேலும் குறித்த வீடியோவின் இறுதியில் அப்பகுதியில் உள்ள அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை நிலையமொன்றுக்குத் தான் தீவைக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் அவர் கூறிய படியே பெற்றோறுடன் குறித்த அதிஷ்ட இலாபச் சீட்டுக் கடைக்குச் சென்றிருந்த அவர், அக்கடைக்குத் தீ வைத்துள்ளார்.

இதில் குறித்த கடையில் இருந்த அதிஷ்ட இலாபச் சீட்டுகள் முற்றிலுமாக எரிந்து நாசமானது.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் இது குறித்த விசாரணையைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

ரஷ்யா

கொரோனாத் தடுப்பூசியைக் கண்டு பிடித்தவர் கொடூரக் கொலை

உலகை அச்சுறுத்தி வந்த கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக ரஷ்யாவினால் கடந்த 2020 ஆம் ஆண்டு 'ஸ்புட்னிக்-வி' (Sputnik V) என்ற தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் இத்தடுப்பூசியைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளில் ஒருவரான ஆண்ட்ரே போடிகோவ் (Andrey Botikov) என்பவர் கடந்த 2 ஆம் திகதி தனது வீட்டில்

வைத்து மர்ம நபரால் 'இடுப்புப் பட்டியைக் கொண்டு கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில்' கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது மரணம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

47 வயதான போடிகோவ், 'கமலேயா தேசிய ஆராய்ச்சி மையத்தில்' மூத்த விஞ்ஞானியாகப் பணியாற்றி வந்தவர் என்பதும், கடந்த 2021 ஆம் ஆண்டு சிறந்த விஞ்ஞானிக்கான விருதை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

அரேபிய பல்கலைக்கழகங்களில் யோகா

இந்திய அரசானது கடந்த சில வருடங்களாக யோகாவை சர்வதேச அளவில் பரப்ப பல முயற்சிகளை எடுத்து வருகின்றது.

அதே சமயம்இந்தியா உடனான புரிதல்களை மேம்படுத்த சவுதி அரேபிய அரசானது கடந்த 2022ஆம் ஆண்டு யோகா ' நெறிமுறை'என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

இதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் சவுதி அரேபியாவின் முதல் யோகாத் திருவிழா நடைபெற்றது.

இந்நிலையில் சவுதி அரேபிய அரசானது தமது பல்கலைக்கழங்களில் யோகாவை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

'விஷன் 2030 'என்ற சவுதி அரேபியாவின்

தொலைநோக்கு திட்டத்தின் அங்கமாகவே இது அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலம்பியா

80 பொலிஸாரைப் பணயக் கைதிகளாகப் பிடித்த மக்கள்

கொலம்பியாவில், சுக்கெட்டா பகுதியில் ஆயிரக்கணக்கான பழங்குடியின மக்கள் இணைந்து தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகேயுள்ள பாடசாலைகள் மற்றும் வீதிகளை மேம்படுத்தி தருமாறு, அங்குள்ள எண்ணெய்தொழிற்சாலைகள் மற்றும் சுரங்க நிறுவனங்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருக்கும் பழங்குடியின மக்களுக்கும் இடையே மோதல் வெடித்ததாகவும், இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 80-க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளையும், எண்ணெய் தொழிற்சாலை ஊழியர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி

சாரதியில்லா மின்சார கார்கள் அறிமுகம்

ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல வாடகைக் கார் நிறுவனமொன்று சாரதியில்லா மின்சாரக் கார்களை, அறிமுகப்படுத்தியுள்ளது.

நவீன தொழில்நுட்பம் மூலம், கட்டுப்பாடு அறையிலிருந்து சாரதி இல்லாமல் இயக்கப்படும் இக்காரை, வாடிக்கையாளர் தேவைப்படும் இடத்திற்கு செலுத்திச் சென்று இறங்கிக் கொள்ளலாம் எனவும் மீண்டும் அந்த கார் ரிமோட் கண்ட்ரோல் மூலம் தானாகத் திரும்பியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் " நகர சூழலில், சொந்தமாக கார் வைத்துக்கொள்ள விரும்பாதவர்களை மனதில் வைத்தே இச்சேவையை அறிமுகப்படுத்தியதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

நிற்காமல் ஓடி உலக சாதனை

அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தைச் சேர்ந்தவர் மேகன் சுசிடி. இவர் 'உலகிலேயே தொடர்ந்து அதிக நாட்கள் மரதன் ஓடியவர் 'என்ற சாதனையைப் படைத்துள்ளார் .

இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல், கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை மொத்தமாக 23 நாட்கள், சுமார் 50 கிலோமீற்றர் ஓடிச் இச்சாதனையைப் படைத்துள்ளார்.

இந்நிலையில் 'இன்னும் அதிக நாட்கள் ஓட தான் விரும்பியதாகவும், ஆனால் தனக்கு வேலை இருந்ததால் ஓட முடியவில்லை எனவும் மேகன் தெரிவித்துள்ளார்.

மேகன் இதுவரை 100க்கும் மேற்பட்ட மரதன் போட்டிகளில் பங்கேற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



நைஜீரியா

திருடியதால் விபரீதம்; 12 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவில், கச்சா எண்ணெயைத் திருடியபோது ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவில் அண்மைக்காலமாக கச்சா எண்ணெய் விநியோகிக்கும் குழாய்களில் இருந்து சட்ட விரோதமாக கச்சா எண்ணெய் திருடி, அதை வெளிச்சந்தையில் விற்கும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரிவர்ஸ் மாகாணத்தில் ஷெல் நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய்க் குழாயில் சிலர் கச்சா எண்ணெய் திருட முயற்சித்துள்ளனர் எனவும், இதன்போது எதிர்பாராத விதமாக பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீவிபத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில்

சம்பியனான புத்தளம் லிவர்பூல் கழகம்

■ வை.டீ.எஸ் ஸலூன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்படவிருக்கின்ற கால்பந்தாட்ட சங்கக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் அணிகளைத் தெரிவு செய்வதற்காக புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட தங்க, வெள்ளிக் கிண்ணங்களுக்கான தொடரின் தங்கக் கிண்ணத் தொடரில் புத்தளம் லிவர்பூல் கழகம் சம்பியனானது.

புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற நாகவில்லு எருக்கலம்பிட்டியுடனான இறுதிப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்றே லிவர்பூல் சம்பியனானது.

இன்று மூன்றாவது போட்டி:

இங்கிலாந்துக்கெதிராக ஆறுகுல் வெற்றி பெறுமா பங்களாதேஷ்?

பங்களாதேஷ், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது சட்டோகிராமில் இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்ற இங்கிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், இப்போட்டியில் இங்கிலாந்து வெல்வதற்கு அவ்வணியின் சிரேஷ்ட துடுப்பாட்டவீரர்களான தமிம் இக்பால், ஷகிப் அல் ஹஸன், மகமதுல்லா, முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்க இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது.

இதேவேளை இப்போட்டியில் ரெஹான் அஹ்மட்டுக்கு அறிமுகம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

தோற்ற நடப்புச் சம்பியன்கள்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற பியொரென்டீனாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உடினீஸுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 65 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 48 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லேஸியோவும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் இன்டர் மிலமும், அதே புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஏ.சி மிலன் காணப்படுகின்றது. இதில் இன்டர் மிலன் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தின்

இல்ல விளையாட்டுப் போட்டி

■ வ. சக்தி

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியானது, பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியில் குறிஞ்சி இல்லம் 549 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், முல்லை இல்லம் 532 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தை யும், மருதம் இல்லம் 503 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொற்ட்ஸ்பர் தோற்றது.

இந்நிலையில், சௌதாம்ட்னின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் காணப்படுகிறது. நடப்புச் சம்பியன்களான சிற்றி 58 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 49 புள்ளிகளுடன் மன்செஸ்டர் யுனைட்டெட் மூன்றாமிடத்திலும், 45 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் காணப்படுகின்றது. யுனைட்டெட் இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 06 மார்ச் 2023, இல. 08, ஹுனுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.